2021

වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

ANNUAL REPORT



UCIARS

කොළඹ විශ්වවිද්‍යාලයීය කෘෂි තාක්ෂණික හා ග්‍රාමීය විද්‍යා ආයතනය

கொழும்புப் பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவனம்

University of Colombo Institute for Agro-Technology and Rural Sciences

ஆண்டறிக்கை

2021

எமது தூரநோக்கு

இலங்கையின் இயற்கை
வளங்களை பேண்தகு ரீதியில்
முகாமைப்படுத்தி தொழில்
முயற்சிசார் விவசாயத்
துறையை வளர்ப்பதற்கு
அர்ப்பணிப்புடன் செயற்படும்
மிகச் சிறந்த
நிறுவகமொன்றாகப்
பரிணமித்தல்

எமது பணிக்கூற்று

இலங்கையின் பேண்தகு இயற்கை வளங்களை முகாமைப்படுத்தி உலகளாவிய போட்டி அடிப்படையிலான விவசாயத்தின் நிலைத்திருப்புக்காக முன்னோக்குகளுடன் மிகச் சிப்பான வகையில் அறிவூட்டப்பட்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்காக சிறந்த கல்வி, சிறந்த ஆராய்ச்சி, ஆக்கபூர்வமான தொழில் முயற்சிக்கான மூலோபாய கூட்டாண்மைக் கைத்தொழில்கள் மற்றும் படைப்பாற்றல் மிக்க சமூகமொன்றின் நிமித்தம் அர்ப்பணிப்புமிக்க விரிவான மற்றும் அணுக முடியுமான பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமையொன்றை தாபித்தல்.

பதில் கடமை பணிப்பாளரின் மதிப்பாய்வுரை:



இந்த நிறுவகம் முதற் தடவையாக கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் ஹம்பாந்தோட்டை வெலிகத்தவில் மாகம்புர விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் பிரஜைகள் சேவை நிலையமாக 2000 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது. நிலையத்தின் வரலாறு 1998 ஆம் ஆண்டு வரை பின்னோக்கிச் செல்வதுடன் அதனூடாக தொழில்நுட்பத்தை / அறிவை நேரடியாக இறுதிப் பயனர்களிடம் கொண்டுசெல்லல் மற்றும் பிராந்தியத்தினுள் விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழிலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பல வருட காலமாக பிரஜைகளுடன் நெருங்கிய ரீதியிலான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு முடியுமாகியது.

இந்த நிறுவகம் 2008 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகமாக (UCIARS) பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இலங்கையின் முன்னணி நிறுவகமொன்றாக விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களைப் போன்றே உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பட்டத்தை (விவசாயத் தொழில்நுட்பப் பட்டம்) வழங்குவதற்காக தரமுயர்த்தப்பட்டது. அனைத்துப் பாடங்களும் இணையவழிக் கற்கை முகாமைத்துவ முறைமையில் காணப்படுவதனால் விரிவுரைகளுக்கு கலப்புக் கற்கைக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதனூடாக செயன்முறை மற்றும் களச் சுற்றுப் பயணப் பகுதிக்கான மாணவர்களின் பங்கேற்பு கணிசமானளவினால் அதிகரித்துள்ளது. எமது கற்கை நிகழ்ச்சித் திட்டங்களானது சிக்கல்களைத் தீர்த்தல், பகுப்பாய்வு ரீதியிலான திறன்களைப் போன்றே எழுதுவதற்கான மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவதற்காக மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையின் ஏனைய அரச பல்கலைக்கழகங்களினூடாக உருவாக்கப்படும் விவசாயத்துறைப் பட்டதாரிகளுடன் ஒப்பிடும்போது எமது மாணவர்களுக்கு மிகச் சிறந்த நடைமுறை அறிவு மற்றும் திறன் காணப்படுகின்றது.

பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினூடாக (UCIARS) உயர் தரமான நடவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றது (அதாவது உயர் தரமான இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள், கலப்பு முறை தும்பை பாகற்காய் என்பன). UCIARS இன் மேலுமொரு முக்கிய திருப்புமுனை என்னவெனில், விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதன் ஊடாக வறுமையை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சியைப் பலப்படுத்துவதற்காக வாழை, மா மற்றும் காளான் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப ரீதியிலான பங்களிப்பாகும். இந்த நிறுவகத்திற்கு 40 ஏக்கர்களைக் கொண்ட பயிர்கள் மற்றும் கால்நடை வளங்கள் மாதிரிகள் சிலவற்றைக் கொண்டுள்ள பயிர் நிலங்கள் காணப்படுவதுடன் அதனூடாக மாணவர்களின் களச் செயன்முறை மற்றும் மாணவர்களினதும், ஆளணியினரதும் ஆராய்ச்சிகளுக்கு வாயப்பு வழங்கப்படுகின்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் (UCIARS) பதில் கடமை பணிப்பாளர் என்ற வகையில், ‘முதலில் தரம்’ என்ற முன்மாதிரிக் கூற்றைப் பின்பற்றி நாம் முன்னேறியுள்ள ஒவ்வொரு அடிக்கும் முன்னாள் பணிப்பாளர் (2021.08.07 முதல்) / பகுதி நேர ஆலோசகர் பேராசிரியர் எஸ்.சுதர்ஷன், எமது துணைவேந்தர், முகாமைத்துவ சபை மற்றும் பாரிய அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆளணி அங்கத்தவர்களால் வழங்கப்பட்ட சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களை நினைவுகூர்ந்து எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவனத்தின் (UCIARS) இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சகல விதத்திலும் ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி என்.பீ.விதாணபத்திரன
பதில் கடமை பணிப்பாளர்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்

உள்ளடக்கம்

		பக்கம்
1.	மீளாய்வு	
	1.1 அறிமுகம்	72
	1.2 முகாமைத்துவ சபை	73
	1.3 கல்விசார் ஆலோசனைக் குழு	74
	1.4 கணக்காய்வுக்குழு	74
	1.5 நிறுவனக் கட்டமைப்பு	76
2.	மொத்த செயற்திறன்	77
	2.1 கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறன்	79
	2.2 நாற்று மேடை / ஆய்வுகூடச் செயற்திறன்	89
3.	ஆராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள்	95
4.	பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் ஆளணி மேம்பாடு	101
5.	புனரமைப்பு மற்றும் நிர்மாணிப்புக் கருத்திட்டங்கள்	104
6.	நிதி	106
	6.1 நிதிசார் முன்னேற்றம்	
	மீண்டெழும் செலவினம் பற்றிய விபரம்	
	மூலதனச் செலவினம் பற்றிய விபரம்	
	கருத் திட்டச்செலவினம் பற்றிய விபரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியம்)	
	நிதிசார் முன்னேற்றம் (ஈட்டிய வருமானம்) பற்றிய விபரம்	
	நிதிச் செயற்திறன் பகுப்பாய்வு - 2021	
	6.2 உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள்	
7.	பேண்தகு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட எதிர்கால இலக்குகள் பற்றிய அறிக்கை	110
8.	நிதிக் கூற்றுக்கள் - 2021	113

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

இலக்குகள்		நோக்கங்கள்	மூலோபாயம்
இலக்கு 1	தேவையான பண்புகளைக் கொண்ட பட்டதாரிகளைக் உருவாக்குவதனை மேம்படுத்தல்	• பட்டப் பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்படும் அளவை வருடாந்தம் 10% இனால் அதிகரித்தல்.	• ஏற்கனவே இருக்கும் பட்டப் பாடநெறிக்கு இரட்டை நுழைவு முறையை அறிமுகப்படுத்தல்
		• தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் மென் திறன்களை (soft skills) அபிவிருத்தி செய்வதற்காக அதிக வாய்ப்புடனான (10%) பாடத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் மறுசீரமைத்தல்.	• மென் திறன்களை (soft skills) அபிவிருத்தி செய்வதற்கு உதவி புரியும் பாடங்களுடன் பாடத் திட்டங்களை மேம்படுத்துதல்
		• மாணவர் மையக் கற்கை மற்றும் பெறுபேற்றை அடிப்படையாகக்கொண்ட கல்வி மற்றும் மதிப்பீட்டை பலப்படுத்தல்.	• தொழில்நுட்பத்தினூடாக பாட விதானங்கள் மற்றும் விரிவுரைகளை பகிரும் முறையை மேம்படுத்தல்
		• மாணவர்கள் மற்றும் வெளியேறிய பட்டதாரிகளினால் உருவாக்கப்படும் விவசாய தொழில் முயற்சிகளின் அளவை அதிகரித்தல்	• தொழில் முயற்சி மற்றும் விவசாய வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமாக மாணவர்களின் அறிவை மேம்படுத்தல்
		• கற்கைக்கான வளங்கள் மற்றும் பயிற்சி வசதிகளை அதிகரித்தல்	• மாணவர்களின் திறன்கள் மற்றும் செய்முறை அறிவை மேம்படுத்தல்
இலக்கு 2	கைத்தொழில் கூட்டாண்மை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரித்தல்	• பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்காக கைத்தொழிலுடன் பரஸ்பர ரீதியாக பலம்மிக்க தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்	• பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை மேம்படுத்தல்
		• கைத்தொழில் துறையில் "அசைவுகள் மற்றும் குழுக்குபவர்கள் (movers and shakers)" மற்றும் நம்பிக்கையளிக்கும் தொழில் முயற்சியாளர்களை அழைப்புப் பணியாட் தொகுதியாக நியமித்தல்	• புதிய கண்டுபிடிப்புக்கள் சம்பந்தமான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளல்
		• தனியார் மற்றும் அரசாங்க கூட்டு தொழில் முயற்சிகளை உருவாக்குதல் (PPP)	• அதற்காக (PPP) வசதிகள் மற்றும் வாய்ப்புக்களை வழங்குதல்
இலக்கு 3	மேம்படுத்தப்பட்ட கல்விசார் சிறப்புக் குறிப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் மேம்பாடு	• 2024 ஆம் ஆண்டாகும்போது ஆளணியின் **80%** ஆனோருக்கு பட்டப்பின் படிப்பு பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்	• வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பட்டப்பின் படிப்புக்கான ஆர்வத்தை ஏற்படுத்தல்
		• 2024 ஆம் ஆண்டாகும்போது கல்விசார் ஆளணியின் **50%** வரை சிரேட்ட ஆளணிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்	• சிரேட்ட ஆளணிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல் மற்றும் பதவியுயர்வு சதவீதத்தை அதிகரித்தல்
		• பிராந்திய மையப்படுத்தலுடனான உயர் தாக்கத்துடனான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் சூசிகைப்படுத்தப்பட்ட (indexed journals) சஞ்சிகைகளில் அந்தக் கண்டுபிடிப்புக்களை வெளியிடல்.	• உயர் ஆராய்ச்சிக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விரிவுபடுத்தல் மற்றும் வலையமைப்புக்களை கட்டியெழுப்புதல்
		• ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை வர்த்தகமயப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றலுக்கான வசதிகளை வழங்குதல்	• புதிய தொழில்நுட்பம் பற்றிய சிறப்பு அறிவை மேம்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்

		• தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக பிரஜைகளுக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் தகவல்களை வழங்குதல்	• பிரஜைகளுடன் சிறப்பான தொடர்பாடல் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு முடியுமான வகையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்
இலக்கு 4	உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள்	• கல்விசார் மற்றும் நிர்வாகம்சார் உட்கட்டமைப்பு வசதிகளை வருடாந்தம் **20%** இனால் மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்	• புதிய தொழில்நுட்பத்தினூடாக கல்விசார் வசதிகளை மேம்படுத்தல் • ஆளணி மற்றும் மாணவர்களுக்கான உட்டகட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்
		• ஆராய்ச்சிக்கான வசதிகளை வருடாந்தம் **20%** இனால் மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்	• வசதிகளை மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மீது ஆர்வத்தை ஏற்படுத்தல்
		• 2024 ஆம் ஆண்டாகும்போது மாணவர் மற்றும் ஆளணிக்கான தங்குமிட வசதிகளை **50%** இனால் அதிகரித்தல்	• தங்குமிட வசதிகளை விரிவுபடுத்தல்
		• பசுமை வெளி / பசுமை தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்	• பசுமை சூழலை மேம்படுத்தல்
இலக்கு 5	மேம்படுத்தப்பட்ட நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் ஒழுக்கம்	• கல்விசார், நிர்வாகம் மற்றும் தொழில்நுட்ப ஆளணியின் திறன் (ஆற்றல்) விருத்தி	• கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் திறன்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையை பலப்படுத்தல் • பதவியுயர்வுகளுக்கான வாய்ப்பை வழங்குதல்
		• 2025 ஆம் ஆண்டாகும்போது முழுமையாக கணனிமயப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த முகாமைத்துவ தகவல் கட்டமைப்பொன்றை (MIS) அறிமுகஞ் செய்தல்.	• முழுமையான கணனி மயப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த முகாமைத்துவ முறைமையுடன் அனைத்துப் பிரிவுகளையும் தொடர்புபடுத்தல்
		• வருடாந்தம் 10% இனால் கணக்காய்வு ஐய வினாக்களைக் குறைத்தல் மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல்.	• நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை வழிகாட்டி மற்றும் மூலதன அலுவல்கள் சம்பந்தமாக ஆளணி அங்கத்தவர்களுக்கு அறிவூட்டல்.
		• சிக்கனம், வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் **(3Es)**	• வளங்கள் (பௌதிக, மனித மற்றும் நிதி) பகிர்தல், வெளிவாரியாகப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அறிவார்ந்த விளக்கம்
		• தேறிய வருமானத்தை அதிகரித்தல் (பயிற்சியளிப்பு, ஆலோசனை, அறிவுரை, தகவல் சேவைகள், காப்புரிமை அனுமதிப் பத்திரம், உயரடுக்கு நடவுப் பொருள் மற்றும் பண்ணை விற்பனை)	• வருமானம் ஈட்டல் நடவடிக்கைகளுக்காக தேறிய வருமானத்தை அதிகரித்தல்

1. மீளாய்வு

1.1 அறிமுகம்

இந்த நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2000 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை, வெளிகத்த மாகம்புர விவசாய தொழில்நுட்ப மற்றும் பிரஜைகள் சேவைகள் நிலையமாக முதலில் தாபிக்கப்பட்டது. இந்த நிலையம் 1998 ஆம் ஆண்டு வரை பின்னோக்கிச் செல்வதுடன், பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இக்காலப் பகுதி பூராவும் மக்களுடன் தொடர்பைப் பேணி அவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் பிராந்தியத்தின் விவசாயம் மற்றும் விவசாயக் கைத்தொழிலின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் ஸ்தாபகர், கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவியுமான பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம ஆவார்.

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 'அ' பிரிவு மற்றும் 2008 இன் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயர் கல்வி நிறுவகமொன்றாக கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் (UCIARS) நிறுவப்பட்டது. இந்த விதிமுறை 2008 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் வலுப்பெறுகின்றது.

கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் விவசாய தொழில்நுட்ப இளமாணிப் பட்டப் பாடநெறியை நடாத்தி வருகின்றது. கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்படும் இந்த அனைத்துப் பாடநெறிகளும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் பிரஜைகளிடையே கல்விக்கான வாய்ப்பை உருவாக்குவதில் பிரதான தடையாக இருக்கும் வயது, அவகாசம், காலம் மற்றும் கல்விப் பின்னணி போன்ற காரணிகளைத் தவிர்த்து சிறந்த தொலைக் கல்வி முறையின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட கல்விக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவகம் விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய தொழில்நுட்பம் சம்பந்தமான உயர் கல்வியை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக தற்போது விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் சம்பந்தமாக மக்களிடையே ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தியை மேற்கொண்டுள்ளது. அது விவசாயப் பிரஜைகளின் உயர் கல்வியின் நுழைவாயிலைச் சென்றடைவதற்கான கனவை நனவாக்கி அவர்களுடைய இல்லங்களுக்கே தொலைக்கல்வி முறையின் ஊடாக கல்வியைக் எடுத்துச்சென்று நபர்களிடையே மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் சமூகத் தேவையை நிறைவேற்றுவதிலும் வெற்றி கண்டுள்ளது. ஆனாலும் அவர்களின் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பம் அல்லது எதிர்பார்ப்பு அவர்களின் தனிப்பட்ட, குடும்ப மற்றும் பொருளாதார பின்னனி போன்ற காரணங்களினால் விடுபடுவதற்கான சந்தர்ப்பங்களைக் காண முடியுமாக இருக்கின்றது. இந்த நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்வதற்கான மற்றும் அனுமதி பெறுவதற்கான தகைமைகள் நெகிழ்வுத் தன்மையுடையதாகக் காணப்படுவதனால் கிராமிய ஏழை விவசாயிகள் மேலதிகக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு, நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களது கல்வி மற்றும் தொழில் சார்ந்த சமூக அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கு உகந்த இடமொன்றாக அமைக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி இந்த நிறுவகம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக மிகவும் நியாயமான விலையில் உள்நாட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகளை உற்பத்திகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனூடாக வருமானத்தை உழைக்கின்றது. இந்த நிறுவகம் நாடு பூராவும் பரந்து வாழுகின்ற கிராமிய விவசாயிகளுக்கு இழைய வளர்ப்பு வாழைக் கன்றுகள் உற்பத்தித் தொழில்நுட்பம் சம்பந்தமாக அறிவூட்டுவதற்காக பல செயலமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. அத்துடன், கிராமிய விஞ்ஞானத்துடன் இணைந்து காணப்படும் புதிய தொழில்நுட்பம் சம்பந்தமாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காக நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் பல்வேறு கண்காட்சிகளில் பங்கேற்றுள்ளது.

1.2 முகாமைத்துவ சபை

2008 இன் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைய கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம் தனது முகாமைத்துவ சபையை அமைத்துள்ளதுடன், மேற் குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கமைய முகாமைத்துவ சபை, நிறுவகத்தின் கல்வி மற்றும் நிறைவேற்று சபையாகவும் இருப்பதுடன் அது கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

அட்டவணை இல. 01: 2021 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபையின் விபரம்

பதவிவழி அடிப்படையில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் (சட்டத்தற்கமைய)		
1	பணிப்பாளர் - தலைவர் / கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்	பேராசிரியர் எஸ்.சுதர்ஷன் பணிப்பாளர் (07.08.2021 வரை) கலாநிதி என்.பீ.விதானபதிரண, பதில் கடமை பணிப்பாளர் (08.08.2021 முதல்)
2	பிரதிப் பணிப்பாளர்	நிறுவகத்திற்கு பிரதிப் பணிப்பாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்படவில்லை
3	உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது விடயத்திற்குப் பொறுப்பான செயலாளர் அல்லது அந்த அமைச்சின் உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர் ஒருவர்	திருமதி ரீ.கே.டப்ளியூ.பீ.பிரேமரத்ன உதவிப் பணிப்பாளர் (மாணவர் கடன் திட்டம்), கல்வி அமைச்சு.
4	கமத்தொழில் அமைச்சின் செயலாளர் அல்லது அந்த அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும்அங்கத்தவர் ஒருவர்	கலாநிதி எஸ்.எச்.எஸ்.ஏ. டி சில்வா, மேலதிக செயலாளர் (கமத்தொழில் அமைச்சு)
5	விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி / கொழும்பு பல்கலைக்கழகம்	பேராசிரியர் டீ.யூ.ஜேசொன்னாதர
ஏனைய அங்கத்தவர்கள் (சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம்)		
1	விவசாய தொழில்நுட்பம் மற்றும் விவசாய வர்த்தகக் கைத்தொழிலை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமிக்கப்படும் இரண்டு அங்கத்தவர்கள்	பேராசிரியர் எம்.பீ.எஸ்.மாகமகே, பீடாதிபதி / விவசாய பீடம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தலைவர் / தேசிய கால்நடை அபிவிருத்தி சபை
		திரு.நிரன்ஜன் கோலித்த டி சில்வா, சிரேஷ்ட சட்டத்தரணி
2	நிர்வாக சபை அங்கத்தவர்களிடையே நியமிக்கப்படும் இரண்டு அங்கத்தவர்கள்	பேராசிரியர் எஸ்.கருணாரத்ன
		திரு.மகிந்த மடிஹஹேவா
3	ஹம்பந்தோட்டை மாவட்டச் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்	திரு. எச்.பீ.சுமணசேக்கர
4	கல்விசார் ஆலோசனை குழுவின் அங்கத்தவர்களில் இருந்து நியமிக்கப்படும் ஒருவர்	கலாநிதி எஸ்.எச்.எஸ்.ஏ. டி சில்வா, மேலதிக செயலாளர், கமத்தொழில் அமைச்சு.
முகாமைத்துவ சபையின் செயலாளர்		
சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்		திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி

நிறுவகத்தின் முகாமைத்துவ சபை, கல்வி மற்றும் நிர்வாக விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வு செய்வதற்காக இந்த ஆண்டில் முறையாகக் கூடியுள்ளது. முகாமைத்துவ சபை 2021 இல் 12 தடவைகள் கூடியுள்ளது.

1.3 நிறுவகத்தின் கல்விசார் ஆலோசனை சபை

நிறுவகத்தினால் 2021 ஆம் ஆண்டு கல்வி சார்ந்த விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ சபைக்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக கல்விசார் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவக சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுக்கமைய நிறுவப்பட்டுள்ள அக்குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

அட்டவணை இல. 02: 2021 ஆம் ஆண்டின் கல்விசார் குழுவின் விபரம்

1	பணிப்பாளர் - தலைவர் / கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்	பேராசிரியர் எஸ்.சுதர்ஷன் பணிப்பாளர் (07.08.2021 வரை) கலாநிதி என்.பீ.விதானபதிரண, பதில் கடமை பணிப்பாளர் (08.08.2021 முதல்)
2	கற்கைப் பிரிவுகளின் தலைவர்	குலாநிதி (திருமதி) என்.பீ.விதானபதிரண விவசாய – தொழில்நுட்ப கற்கைப் பிரிவுத் தலைவர்
3	விவசாயம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் பிரதிநிதிகளாக அந்த அமைச்சுக்களின் செயலாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் இருவர்	கலாநிதி எஸ்.எச்.எஸ்.ஏ. டி சில்வா, மேலதிக செயலாளர் (கமத்தொழில் அமைச்சு) பொறியியலாளர் (திருமதி) பீ.ஏ.ஏ.பீ.கே.பன்னல, மேலதிக செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு (நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் மேம்பாடு)
4	கற்கைப் பிரிவுகளால் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர்	கலாநிதி எஸ்.எஸ்.வீரசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் - I
5	கற்கை பாடநெறிகளின் ஒருங்கிணைப்பாளர்கள்	-
6	கற்கைப் பிரிவுகளின் சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் மற்றும் துணைப் பேராசிரியர்கள்	-
7	கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவகத்தின் நிரந்தர ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேலே 06 இற்குள் வராத உறுப்பினர்கள்.	திரு. எல்.எம்.ரிப்னாஸ் - விரிவுரையாளர் (தகுதிகாண்) திருமதி கே.ஜீ.கெட்டிபேஆரச்சி - விரிவுரையாளர் (தகுதிகாண்)
கல்விசார் ஆலோசனை குழுவின் செயலாளர்		
சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகம்		திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி

நிறுவகத்தின் கல்விசார் ஆலோசனைக் குழு, கல்வி சார்ந்த விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வு செய்வதற்காக இந்த ஆண்டில் முறையாகக் கூடியுள்ளது. முகாமைத்துவ சபை 2021 இல் 08 தடவைகள் கூடியுள்ளது.

1.4 கணக்காய்வுக் குழு

நிறுவகத்தின் கணக்காய்வுக்குழு என்றால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் வெளிவாரியான (அரசாங்க) கணக்காய்வு அறிக்கைகளின் விடயங்கள் சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்காக முகாமைத்துவ சபைக்கு ஒத்துழைப்பு வழங்கும் உப குழுவொன்றாகும். இக்குழுவின் தலைவராக முகாமைத்துவ சபையினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர் கடமையாற்றுவார். பணிப்பாளர், விவசாய – தொழில்நுட்பப் பிரிவின் தலைவர், உதவி நிதிப்

பொறுப்பாளர் மற்றும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஆகியோர் குழுவின் அங்கத்தவர்களாக இருப்பதுடன், கூட்டங்களுக்கான அழைப்பாளராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் நடவடிக்கை மேற்கொள்வார். கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதிகளுக்கு மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வாளருக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.


நிறுவகத்தின் கணக்காய்வுக் குழு, ஆண்டில் காலாண்டு ரீதியாகக் கூடியுள்ளது. கணக்காய்வுக் குழு 2021 இல் 04 தடவைகள் கூடியுள்ளது.

2021 இல் கணக்காய்வுக் குழு கீழ் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது:

அட்டவணை இல. 03: 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழுவின் விபரம்

1	தலைவர் / முகாமைத்துவ சபையின் பரிந்துரை	சட்டத்தரணி, திரு.என்.கே. டி சில்வா
2	முகாமைத்துவ சபையின் ஏனைய அங்கத்தவர்கள் பரிந்துரை	கலாநிதி எஸ்.எச்.எஸ்.ஏ. டி சில்வா, மேலதிக செயலாளர் (கமத்தொழில் அமைச்சு) பேராசிரியர் டீ.யூ.ஜேசொன்னாதர விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி / கொழும்புப் பல்கலைக்கழகம்
3	திறைசேரியின் பிரதிநிதி	தலைமைக் கணக்காளர், மாவட்ட செயலகம்/ ஹம்பாந்தோட்டை
4	கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிநிதி	திருமதி கே.வீ.ரீ.என்.சிங்ஹகோஷ கணக்காய்வு அத்தியட்சகர், அரசாங்க கணக்காய்வுப் பிரிவு, கொழும்புப் பல்கலைக்கழகம்
5	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி	திரு.ஜானக்க போகமுவ உள்ளக கணக்காய்வாளர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
7	கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தின் பிரதிநிதிகள்	பேராசிரியர் எஸ்.சுதர்ஷன் பணிப்பாளர் (07.08.2021 வரை) கலாநிதி என்.பீ.விதானபதிரண, பதில் கடமை பணிப்பாளர் (08.08.2021 முதல்) பிரிவுத் தலைவர் / விவசாய தொழில்நுட்ப கற்கைப் பிரிவு திருமதி ஏ.டீ.பீ. டி சொய்சா/ கே.சுனில் உதவி நிதிப் பொறுப்பாளர் / UCIARS திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி, சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
8	கணக்காய்வுக்குழுவின் செயலாளர்	திரு. கே.ஈ.டப்ளியூ.ஜயசிரி / திரு. எஸ்.பீ.ஜீ.நிஹால் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்

1.5 நிறுவனக் கட்டமைப்பு



விளக்கப்படம் 1 – நிறுவனக் கட்டமைப்பு

2. மொத்த செயற்திறன்


நிறுவகத்தின் பிரதான பணி என்னவெனில் விவசாயத் தொழில்நுட்ப பட்டப் படிப்புத் திட்டத்தை செயற்படுத்தல், இழைய வளர்ப்பு வாழைக் கன்று உற்பத்தி மற்றும் ஏனைய பண்ணை உற்பத்திகளில் ஈடுபடுவதாகும்.

2021 ஆம் ஆண்டில் இந்த நிறுவகத்தின் விவசாய தொழில்நுட்பப் பிரிவு ஊடாக கல்விசார் நடவடிக்கைகளும் ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி இழைய வளர்ப்பு வாழைக் கன்று உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

67 அங்கத்தவர்களைக் கொண்ட ஆளணியின் ஒத்துழைப்புடன் நிறுவனம் அதன் இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆளணியானது 3% நிர்வாக நடவடிக்கைகள், 13.4% கல்விசார் / கல்விசார் உதவி (நிரந்தரம்), 13.4% கல்விசார் (பணி ஒப்படை /தற்காலிகம்), 70.1% கல்வி சாரா (நிரந்தர / பணி ஒப்படை) என்ற ரீதியில் அமைந்துள்ளது. (அட்டவணை 04 மற்றும் உரு. இல. 01) 2021.12.31 ஆம் திகதியன்று நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் தற்போதைய ஆளணி பற்றிய விபரம் அட்டவணை 05 ஊடாக விபரிக்கப்படுகின்றது.

அட்டவணை 04 : 2021 இல் நிறுவகத்தின் ஆளணி

ஆளணியின் வகைப்படுத்தல்	ஊழியர் எண்ணிக்கை
நிர்வாகம்	2
கல்விசார் / கல்விசார் உதவி (நிரந்தரம்)	9
கல்விசார் (பணி ஒப்படை /தற்காலிகம்)	9
கல்வி சாரா	47
மொத்த ஆளணி	**67**



உரு. இல. 01 : 2021 இல் நிறுவகத்தின் ஆளணி

அட்டவணை - 05 : 2021.12.31 திகதியன்று நிறுவகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் தற்போது நிலவும் பதவிகள் பற்றிய விபரம்

பதவிப் பெயர்		சேவை வகுதி	தரம்	சம்பளக் குறியீடு	சேவை மட்டம்	மு.சே.தி. அங்கீகரித்துள்ள பதவிகளின் எண்ணிக்கை			தற்போது நிலவும் பதவிகளின் எண்ணிக்கை			
						நிரந்தரம்	ஒப்பந்த அடிப்படை	காலை	நிரந்தரம்	ஒப்பந்த அடிப்படை	காலை	பணி ஓய்வு
1	பணிப்பாளர்	கல்விசார்		U-AC 5	சிரேஷ்ட	1			1			
2	பேராசிரியர்	கல்விசார்		U-AC 5	சிரேஷ்ட	8			0			
3	துணை பேராசிரியர்	கல்விசார்		U-AC 4	சிரேஷ்ட				0			
4	சிரேஷ்ட விரிவுரையாளர் /விரிவுரையாளர் / விரிவுரையாளர் (தகுதிகாண்)	கல்விசார்		U-AC 3	சிரேஷ்ட				8			
5	ஆராய்ச்சி உதவியாளர்	கல்விசார் உதவி		U-AS 1	3 ஆம் நிலை	1			1			
6	தற்காலிக செய்முறை விளக்குநர்	ஒப்பந்த		U-AC 1 (நிரந்தர)	3 ஆம் நிலை		4			4		
7	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	UA & FS	II/I	U-EX 2	சிரேஷ்ட	1			1			
8	உதவி நிதிப் பொறுப்பாளர்	UA & FS	II/I	U-EX 1	3 ஆம் நிலை	1			1			
9	பண்ணை முகாமையாளர்	Dept.	II/I	U-EX 1	3 ஆம் நிலை	1			0			
10	உப விடுதி நிர்வாகி	Dept.	III/II /I	U-MN 3	2 ஆம் நிலை	1			1			
11	தொழில்நுட்ப அலுவலர் (தகவல் தொழில்நுட்பம்)	UTS	III/II /I	U-MT 1	2 ஆம் நிலை	1			0			
12	தொழில்நுட்ப அலுவலர்	UTS	III/II /I	U-MT 1	2 ஆம் நிலை	2			0			
13	கள நிர்வாகி		III/II /I	U-MT 1	2 ஆம் நிலை	1			1			
14	முகாமைத்துவ உதவியாளர்	UMAS	III/II /I	U-MN 1	2 ஆம் நிலை	8			5			
15	முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியசாலை)	UMAS	III/II /I	U-MN 1	2 ஆம் நிலை	2			1			
16	முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவு)	UMAS	III/II /I	U-MN 1	2 ஆம் நிலை	1			0			
18	சாரதி	UDS	III/II /I/Spl	U-PL 3	ஆரம்ப நிலை	2			2			
19	மின்சார தொழில்நுட்பவியலாளர்	Dept.	III/II /I/Spl	U-PL 3	ஆரம்ப நிலை	1			0			
20	ஆராய்ச்சி உதவியாளர்	Dept.	III/II /I/Spl	U-PL 2	ஆரம்ப நிலை	26			21			
21	உளவு இயந்திர இயக்குனர்	Dept.	III/II /I/Spl	U-PL 2	ஆரம்ப நிலை	1			0			
22	நாற்றுமேடை பொறுப்பாளர்	Dept.	III/II /I/Spl	U-PL 1	ஆரம்ப நிலை	2			0			
23	பணி உதவியாளர்	UWAS	III/II /I/Spl	U-PL 1	ஆரம்ப நிலை	19			15			

**	**பணி ஒப்படை அடிப்படையில் தற்போது பணியாற்றும் ஊழியர்கள் (அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் அல்லாத)**											
	பாடநெறி ஒருங்கிணைப்பாளர்											5
	கணனி இயக்குநர் மற்றும் தக.தொழி.ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்											1
மொத்தம்						**80**	**4**	**0**	**57**	**4**	**0**	**6**

அட்டவணை - 06 : 2021.12.31 ஆம் திகதியன்று நிறுவகத்தின் நிர்வாக ஆளணி

இல.	பெயர்	பதவி
1	கலாநிதி என்.பீ.விதானபதிரண	பதில் கடமை பணிப்பாளர் (2021.08.08 முதல்)
2	திருமதி எஸ்.ஏ.எஸ். பிரியதர்சனி	சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
3	ஏ.டீ.பீ டி சொய்சா	உதவி நிதிப் பொறுப்பாளர்

அட்டவணை - 07: 2021.12.31 ஆம் திகதியன்று நிறுவகத்தின் நிர்வாகம் / நிதிப் பிரவின் கல்விசாரா ஆளணி (நிர்வாக / நிதி உதவி)

இல.	பெயர்	பதவி
1	கே.ஜீ.எம்.சமரவிக்ரம	உப மேற்பார்வையாளர் (முழு நேரம்)
2	திருமதி டப்.கே.கே.ராஜிகா நிலங்கனி	முகாமைத்துவ உதவியாளர் தரம் III
3	திரு. ஆர்.வீ.பீ.என்.பீ.குமார	முகாமைத்துவ உதவியாளர் தரம் III
4	திருமதி ஆர்.ஏ.எம்.தில்ஹாரி	ஆய்வுகூட உதவியாளர்
5	திருமதி யூ.எம்.ஏ.ஏ.எம். டி சில்வா	முகாமைத்துவ உதவியாளர் தரம் III
6	திரு.ஜே.ஏ.யூ.எஸ்.ஜயவர்தன	முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியசாலை)
7	திரு.எம்.ஜீ.ஜே.பீ.எஸ்.சந்தருவன்	பணி உதவியாளர் தரம் III
8	திருமதி கே.டீ.சீ.ஆரியசேன	கணனிப் பயன்பாடுகள் உதவியாளர்
9	டப்ளியூ.எச்.யூ.கௌஷல்யா	ஆய்வுகூட உதவியாளர் தரம் III
10	திரு. பீ.பி.தர்ஷன	பணி உதவியாளர் தரம் III
11	திரு.கே.எஸ்.ஆர்.சம்பத்	பணி உதவியாளர் தரம் III
12	திரு.டப்ளியு.எம்.சமிந்த	பணி உதவியாளர் தரம் III
13	திரு.பீ.ஜீ.எஸ்.குமார	ஆய்வுகூட உதவியாளர் தரம் III
14	திரு.எஸ்.வீ.உபாலி	சாரதி தரம் II
15	திரு.டப்ளியூ.டப்ளியூ.கே.பிரியங்கர	சாரதி தரம் II

2.1 கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறன்

2008 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில் நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினால் கற்கைப் பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதனூடாக தற்போது விவசாய கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நபர்களுக்கு விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானம் போன்ற துறைகளினூடாக உயர் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களிடத்தில் இந்தக் கற்கை நெறிகளை பிரசித்தப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஒருபோதும் உயர்கல்விக்கான வாய்ப்புக் கிடைக்காத விவசாயப் பிரஜைகளுக்கு கல்வியை "கலப்பு முறை" மூலமாக பெற்றுக்கொடுப்பதனூடாக தனிநபர் மற்றும் சமூக ரீதியில் அவர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்த

முடியுமாக இருக்கும். உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு / கற்பதற்கான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் அவர்களிடத்தில் காணப்பட்டாலும் அவர்களின் சொந்த அல்லது குடும்பப் பின்னனி அல்லது பொருளாதார ரீதியாக எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக அச்சந்தர்ப்பத்தை இழந்தவர்கள் இந்தக் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கற்கைப் பாடநெறிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள் மற்றும் பாட நெறிகளைத் தெரிவு செய்யும்போது காண்பிக்கப்படும் நெகிழ்வுத் தன்மையானது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு வசதியாக இருப்பதுடன் நிறுவகத்தின் வழிகாட்டல்கள் நவீன தகவல் தொடர்பாடல் ஊடாக கிராமிய விவசாயிகளுக்கு வழங்கப்படும் இந்த உயர் கல்வியின் உயர் தரத்தைப் போன்றே கற்கைப் பாடநெறிகளை இலகுவாக கற்க முடியுமான வகையில் அவற்றின் முறையான தன்மையை பேணியவாறு அதற்கு வாய்ப்பளித்தலும் அவர்களுடைய கல்விசார், தொழில்சார் மற்றும் சமூகஞ்சார்ந்த அபிலாஷைகளை அடைந்துகொள்வதுற்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றது.

இது, விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கான புதியதொரு கல்வி நடவடிக்கையாக இருப்பதுடன் இலங்கையினுள் தேசிய மொழி மூலத்தில் கிராமிய விவசாயப் பிரஜைகளின் அறிவை வளர்ப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். இலங்கையில் விவசாயிகள் அதிகமாக கிராமப் புறங்களில் கூட்டாக வாழ்வதுடன், விவசாயத்திற்கான அவர்களின் பங்களிப்பு மிக உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. ஆனாலும் கிராம விவசாயிகளுக்கு அவர்களின் கல்வி, தனிப்பட்ட மற்றும் தொழில் ரீதியான அபிவிருத்தியைச் செய்து கொள்வதற்கான வசதிகள் மிகக் குறைவாகும். இதனால் முதல் முறையாக, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெளிகத்த விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான கற்கைகள் நிறுவகத்தினால் (UCIARS) தற்போது விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு விவசாயத் தொழில்நுட்பப் பட்டத்தை வழங்கியுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் முக்கிய பண்பு என்னவெனில், இலங்கைக்கு புதியதொரு அனுபவமொன்றான இணையவழி மற்றும் இலத்திரனியல் தொலைக் கல்வி முறை (online and distance e-learning method) ஊடாக இந்தக் கற்கைத் திட்டம் செயற்படுத்தப்படுவதாகும்.

கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

1. கலப்புக் கற்றல் முறைகளின் ஊடாக (தனிச் சிறப்பான) விவசாயத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆயுட்காலக் கல்வி, நெகிழ்வுத் தன்மை மற்றும் மாணவர் மையக் கற்றல் முறை போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விரிவான பிரவேசத்திற்கான வாய்ப்பை வழங்கி உயர் கல்வியை சகல பிரஜைகளுக்கும் வழங்கும் உரிமையை உறுதிப்படுத்தல்.

2. விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் / விவசாயக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களை அறிவை அடிப்படையாகக் கொண்ட விவசாயத் துறையில் ஈடுபடுத்துவதன் ஊடாக விவசாய உற்பத்திகளின் தரம் மற்றும் அளவை அதிகரித்தல்

இந்த வேலைத் திட்டத்தின் சிறப்புப் பண்புகள்

- உயர் கல்வி தொடர்பான கனவு நிறைவேறாத விவசாயத்தில் ஈடுபடும் பிரஜைகளுக்கு இணைய வழிக் கற்கை மாதிரியின் ஊடாக கல்வியைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியாக அவர்களிடத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்தல்.
- விவசாயத்தில் ஈடுபட்டவண்ணம் உயர் கல்வியை தொடர விவசாயிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தல்
- இலங்கை விவசாயிகளுக்கு புதிய விவசாய தொழில்நுட்பத்தை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்
- இலங்கை விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல்கலைக்கழக கல்விப் பாடநெறியாக இருத்தல்.
- 2018 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (உ.த) சித்தியடைந்த விவசாயக் கல்வி மீது ஆர்வமுடைய மாணவர் குழுவொன்று அனுமதித்துக்கொள்ளப்பட்டுள்ளது (A குழு)

விவசாய தொழில்நுட்ப பட்டப் பாடநெறிக்கான (B..) அங்கீகாரம் பற்றிய விபரம்.

மூதவையின் அங்கீகாரம் : 338 ஆவது கல்வி சபைக் கூட்டம் (2010.09.29) - பாடத் திட்டம்
நிர்வாக சபை அங்கீகாரம்: 462 ஆவது சபைக் கூட்டம் (2012.08.15) - இடைக்கால யாப்பு
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம்:867 ஆவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின்கூட்டம் (2013.02.07) - பட்டப் பாடநெறி

விவசாய தொழில்நுட்பப் பட்டப் பாடநெறி பற்றிய சுருக்கம் (course outline)

விவசாய தொழில்நுட்ப பட்டப் பாடநெறிக்கான காலப் பகுதி 04 வருடங்களாகும்.

'கல்வியாண்டொன்று' 15 வாரங்களைக் கொண்ட 02 கல்வித் தவணைகளைக் (செமஸ்டர்களை) கொண்டுள்ளதுடன் கற்கைப் பாடநெறியானது 'பாடநெறி தர மதிப்பு முறை'யைக் கொண்டுள்ளதுடன் இங்கு மாணவர்கள் செமஸ்டர் பூராவும் தொடர்ந்தும் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுவர். (அதாவது தயாரிப்பு) மற்றும் இறுதி செமஸ்டர் மதிப்பீடு (அதாவது பொழிப்பு) பெயரிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்காக செமஸ்டர் இறுதியில் நடாத்தப்படும்.

விவசாய தொழில்நுட்பவியல் சிறப்புப் பட்டத்திற்கு தகைமை பெறுவதற்காக குறிப்பிட்ட மாணவன் இறுதித் தரத்தில் 120 தர மதிப்புக்களைப் (கிரடிட்) (GPA course units) 120 பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதுடன், அவ்வாறே இறுதித் தரத்தில் பங்களிப்புச் செலுத்தாத (12 Non - GPA course units) கற்கை நெறிப் பிரிவுகள் உட்பட அனைத்துப் பாடநெறிகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

கற்கைப் பாடநெறி, ஒவ்வொரு வருடத்திற்கும் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பிரிக்கப்பட்டுள்ளது :

(1 ஆம் ஆண்டு) - இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 30 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 04 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும்.

(2 ஆம் ஆண்டு) - இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 30 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 03 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும். (திரட்டிய வகையில் இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 60 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 07 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும்.)

(3 ஆம் ஆண்டு) - இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 32 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 03 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும். (திரட்டிய வகையில் இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 92 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 10 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும்.)

(4 ஆம் ஆண்டு) - இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 28 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 02 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும். (திரட்டிய வகையில் இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் கற்கை நெறிப் பிரிவுக்காக 120 தர மதிப்புக்கள் மற்றும் (GPA course units) இறுதித் தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தாத கற்கை நெறிப் பிரிவுக்காக 12 தர மதிப்புக்களையும் ஈட்டிக்கொள்ளல் வேண்டும்.)

கற்கைப் பாடநெறிப் பிரிவொன்றை இனங்கண்டு கொள்வதற்காக அல்பா இலக்க குறியீடு (alpha numeric code) பயன்படுத்தப்படுகின்றது. குறியீடு 'விவசாயத் தொழில்நுட்பம்' எனும் வசனத்தைக் குறிப்பதற்கு ஆரம்பத்தில் பயன்படுத்தப்படும் AT எனும் இரண்டு இலக்கத்தை மற்றும் நான்கு இலக்கத்தைக் கொண்டதாகும்.

அதன் முதலாவது இலக்கத்தின் ஊடாக கற்கை நெறி 'ஆண்டு' உம் இரண்டாவது இலக்கத்தின் ஊடாக கற்கை நெறிப் பிரிவு வழங்கும் 'செமஸ்டர்' உம் குறிப்பிடப்படுகின்றது. மூன்றாவது இலக்கத்தின் ஊடாக கற்கை நெறிப் பிரிவுக்காக வழங்கப்பட்டுள்ள 'தொடரிலக்கம்' குறிப்பிடப்படுகின்றது. (அட்டவணை 08)

விவசாய தொழில்நுட்பப் பட்டப் பாடநெறியின் பாடத்திட்டம் (Curriculum)

பாடத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டதுடன் அது 2018.01.30 ஆம் திகதி நடைபெற்ற 426 ஆவது மூதவை (செனட்) கூட்டத்தின்போது பரிந்துரை செய்யப்பட்டது.

அட்டவணை இல. 08 : பாடநெறியின் உள்ளடக்கம்

T: Theory(கோட்பாடு), P: Practical (செய்முறை), IL: Individual Leaning through LMS (LMS ஊடாக தனிப்பட்ட கற்றல்)

பாடக் குறியீடு	பாடம்	GPA கிரடிட்	NGPA கிரடிட்	பாடநெறிக்கான காலம்(மணி.) T:P:IL
மட்டம் 3 (முதலாவது வருடம்) - செமஸ்ட்டர்I				
AT1101	விவசாய அறிவியல் மற்றும் தோட்டக்கலை பற்றிய கோட்பாடுகள்	3	-	15:60:90
AT1102	பயிர் உயிரியல் பற்றிய கோட்பாடுகள்	2	-	15:30:60
AT1103	நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் பொறியியல்	3	-	15:60:60
AT1104	பண்ணை விலங்குகளின் உடற்கூறியல் மற்றும் உடலியல்	2	-	15:30:60
AT1105	விவசாயப் பொருளாதாரம் மற்றும் விரிவாக்கம் பற்றிய கோட்பாடுகள்	2	-	15:30:60
AT1106	மண் சார்ந்த அறிவியல் பற்றிய கோட்பாடுகள்	2	-	15:30:60
AT1107	விவசாயம் சார்ந்த வானிலை ஆய்வியல்	1	-	00: 30:60
AT1108	ஆங்கிலம்	0	2	15:30:90
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**15**	**2**	**105:300:540**
மட்டம் 3 (1 வருடம்) - செமஸ்ட்டர் II				
AT1201	காய்கறிகள் மற்றும் களப் பயிர்கள் உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்	2	-	15:30:60
AT1202	பீடைகள் மற்றும் நோய் முகாமைத்துவம்	2	-	15:30:90
AT1203	பண்ணை விலங்குகள் முகாமைத்துவம்	3	-	15:60:60
AT1204	பண்ணை சக்தி மற்றும் இயந்திரமயமாக்குதல்	2	-	15:30:60
AT1205	வர்த்தக நோக்கத்திலான மலர் பயிர்ச்செய்கை	2	-	15:30:60
AT1206	மண் மற்றும் தாவர ஊட்டச் சத்து முகாமைத்துவம்	2	-	15:30:90
AT1207	உணவு மற்றும் ஊட்டச்சத்து பற்றிய அறிமுகம்	2	-	15:30:90
AT1208	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	0	2	00:30:30
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**15**	**2**	**105:270:540**
	மட்டம் 3 இன் மொத்த கிரடிட்	**30**	**4**	**210:570:1080**

மட்டம் 4 (2 வருடம்) - செமஸ்ட்டர் I				
AT2101	பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்	3	-	15:60:90
AT2102	பயிர் மேம்பாடு மற்றும் உயிரியல் தொழில்நுட்பவியல்	2	-	15:60:90
AT2103	பழப் பயிர்ச் செய்கை உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்	2	-	15:30:60
AT2104	அறுவடைக்குப் பின்னரான நெறிப்படுத்தல்உணவுத் தொழில்நுட்பம்	2	-	15:30:90
AT2105	புல் ஆராய்ச்சியியல் மற்றும் புற்தரை முகாமைத்துவம்.	2	-	15:30:60
AT2106	விவசாய வணிக முகாமைத்துவம்	2	-	15:30:60
AT2107	அடிப்படை புள்ளிவிபரவியல்	2	-	15:30:60
AT2108	கணனியின் உதவியுடனான மொழிக் கற்கை	0	2	15:30:90
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**15**	**2**	**120:270:600**
மட்டம் 4 (2 வருடம்) - செமஸ்ட்டர் II				
AT2201	ஏற்றுமதிப் பயிர்கள் உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்	2	-	15:30:90
AT2202	பாதுகாக்கப்பட்ட விவசாயம்	2	-	15:30:60
AT2203	விலங்கு வளர்ப்பு மற்றும் பங்கு முகாமைத்துவம்	3	-	15:60:60
AT2204	பண்ணை திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு	2	-	15:45:90
AT2205	விவசாய விரிவாக்கம் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	2	-	15:30:90
AT2206	மீன் வளர்ப்பு உற்பத்தித் தொழில்நுட்பம்	2	-	15:30:60
AT2207	தாவர இழைய வளர்ப்புத் தொழில்நுட்பம்	2	-	15:30:60
AT2208	வாழ்க்கைத் திறன் அபிவிருத்தி	0	1	00:30:30
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**15**	**1**	**105:285:540**
	மட்டம் 4 இன் மொத்த கிரடிட்	**30**	**3**	**225:555:1140**
மட்டம் 5 (3 வருடம்) - செமஸ்ட்டர் I				
AT3101	தோட்டப் பயிர்ச் செய்கை நில வடிவமைப்பு	3	-	30:60:90
AT3102	விவசாய சூழலியல்	2	-	15:30:60
AT3103	விலங்கு உற்பத்திச் செயலாக்க தொழில்நுட்பம்	2	-	15:30:60
AT3104	உணவு பதப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல்	2	-	15:30:90
AT3105	பயிர் மேம்பாட்டுப் பயன்பாடுகள் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம்	2	-	15:30:90
AT3106	மருத்துவத் தாவரங்களின் உற்பத்தி மற்றும் முகாமைத்துவம்	2	-	15:30:60
AT3107	விவசாய வனவியல் மற்றும் காடு வளர்ப்பு	2	-	15:30:60

AT3108	மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள்	0	2	15:30:60
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**15**	**2**	**135:270:570**
மட்டம் 5 (3 வருடம்) - செமஸ்ட்டர் II				
AT3201	பயிர் உற்பத்தி நடைமுறைகள்	4	-	00:120:90
AT3202	கால்நடை உற்பத்தி நடைமுறைகள்	3	-	00:90:90
AT3203	விவசாய பொறியியல் நடைமுறைகள்	2	-	00:60:90
AT3204	விவசாயத்திற்கான இ - வர்த்தகம்	2	-	30:30:60
AT3205	விவசாய நுட்பங்கள்	2	-	30:30:60
AT3206	தொழில் முயற்சியாண்மை மற்றும் வணிகத் திட்டமிடல்	2	-	30:60:90
AT3207	விடய ஆய்வு	2	-	30:30:60
AT3208	முன்னிலைப்படுத்தல்கள் திறன்கள்	0	1	
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**17**	**1**	**120:420:540**
மட்டம் 5 இன் மொத்த கிரடிட்		**32**	**3**	**255:690:1110**
மட்டம் 6 (4 வருடம்) - செமஸ்ட்டர் I				
AT4101	ஆராய்ச்சி முறைகள் மற்றும் முன்மொழிவுகள் மேம்பாடு	2	-	15:30:90
AT4102	விவசாய ஆய்வுகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு	3	-	15:60:90
AT4103	விவசாயத் திட்டப் பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவம்	2	-	15:30:90
AT4104	விவசாய கழிவு முகாமைத்துவம்	2	-	15:30:90
AT4105	புதுப்பிக்கத்தக்க சக்தி முறைகள்	2	-	15:30:60
AT4106	பயிர் மாதிரியமைப்பு	2	-	15:30:60
AT4107	இ - விவசாய பயன்பாடுகள்	2	-	30:30:60
AT4108	உயிரியல் நெறிமுறைகள்	1	-	15:00:60
AT4109	ஆங்கிலம்	0	-	15:30:60
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**16**	**2**	**150:270:660**
மட்டம் 6 (4 வருடம்) - செமஸ்ட்டர் II				
AT4101	விவசாய தொழில்நுட்ப ஆராய்ச்சித் திட்டம்	12	0	0
மொத்த கிரடிட்(தர மதிப்பீடு)		**12**	**0**	**0**
மட்டம் 6 இன் மொத்த கிரடிட்		**28**	**2**	**150:270:660**

விருப்பத்திற்குரிய பாடநெறிகள்

அட்டவணை இல. 09 :

T: Theory(கோட்பாடு), P: Practical (செய்முறை), IL: Individual Leaning through LMS (LMSஊடாக தனிப்பட்ட கற்றல்)

பாடக் குறியீடு	பாடம்	GPA கிரடிட்	NGPA கிரடிட்	பாடநெறிக்கான காலம் (மணி.)T:P:IL
AT1109	தொழில் வழிகாட்டி மற்றும் அபிவிருத்தி	2	-	15:30:60
AT1209	விவசாயம் சார்ந்த சுற்றுலாத்துறை	2	-	15:30:60
AT2109	மின்னணுவியல் மற்றும் கருவிமயமாக்கல்	2	-	15:30:60
AT2209	அனர்த்த முகாமைத்துவம்	2	-	15:30:60
AT3109	கைத்தொழில் பயிற்சி	2	-	00:60:60
AT3209	விலங்குகள் நலன் மற்றும் நெறிமுறைகள்	2	-	15:30:60
AT4209	வன விலங்குகள் முகாமைத்துவம்	2	-	15:30:60

கிராம விவசாய மக்களை விவசாய தொழில் முயற்சியாளர்களாக அபிவிருத்தி செய்யும்போது இந்த வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செய்முறை செயற்பாடுகள், ஒப்படைகள், கோட்பாடு ரீதியிலான விடயங்கள் மற்றும் பயிற்சிக்கால உதவி சேவைகள் போன்ற சகல கூறுகளும் அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில் அபிவிருத்தியின் மீது சிறப்பான வகையில் பங்களிப்புச் செலுத்தியுள்ளது.

மேலும், இந்த பட்டப் பாடநெறிகள் நிகழ்கால சமூகத்தில் உயர் மட்டத்திலான வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், விவசாயத் துறையில் தங்கியிருப்பதற்கு ஆர்வம் காட்டும் இளைஞர் சமூகத்தினரிடையே பாரிய உந்துதலை ஏற்படுத்தியுள்ளது.

கல்வித் திட்டங்களுக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள்

இலங்கையின் தேசிய செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதன் மூலம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

1. க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம் அல்லது உயிரியல் முறைமை தொழில்நுட்பம் அல்லது கணிதப் பாடங்களில் 03 பாடங்களுடன் சித்தியடைந்திருத்தல்

அல்லது

2. குறைந்த பட்சம் மூன்று (03) வருட காலம் விவசாயம் சார்ந்த துறையில் அனுபவம் (குறித்த வசிப்பிடத்தில் விவசாய ஆலோசகர் மற்றும் கமத்தொழில் நிலையத்தின் அபிவிருத்தி அலுவலர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.) மற்றும் க.பொ.த.(உ.த) பரீட்சையில் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகள் தவிர்ந்த ஏனைய பாடத்துறைகளில் 03 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

3. குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் விவசாயம் சார்ந்த துறையில் அனுபவம் (குறித்த வசிப்பிடத்தில் விவசாய ஆலோசகர் மற்றும் கமத்தொழில் நிலையத்தின் அபிவிருத்தி அலுவலர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.) மற்றும் க.பொ.த. (சா.த) பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடத்துடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் (செனட்) ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் சமமான தகைமைகள்

அல்லது

5. அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து விவசாயம் தொடர்பான டிப்ளோமா (NVQ 5 ஆம் மட்டம்) அல்லது உயர் டிப்ளோமா (NVQ 6 ஆம் மட்டம்) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு 30 கிரடிட்களைக் கொண்ட பாடநெறியை (30 credits bridging course) பூர்த்தி செய்ததன் பின்னர் முறையே விவசாயத் தொழில்நுட்பப் பாடநெறியின் இரண்டாவது அல்லது மூன்றாவது ஆண்டிற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்காக நுண்ணறிவுச் சோதனையொன்று நடாத்தப்படும். நுண்ணறிவுச் சோதனையின் பெறுபேறுகளுக்கமைய நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தியதன் பின்னர் தெரிவு செய்யப்பட்டவர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

அட்டவணை - 10 : 2021 ஆம் ஆண்டில் விவசாயத் தொழில்நுட்பப் பட்டத்தை பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

கல்வியாண்டு (குழு / ஆண்டு)	அனுமதித்துக்கொள்ளப்பட்ட (கல்வியாண்டு)	மாணவர்களின் எண்ணிக்கை		
		ஆண்	பெண்	மொத்தம்
1 ஆம் ஆண்டு (11 /12 /13 ஆம் குழுக்கள்)	2019/2020-2020/2021-2021/2022	202	306	508
2 ஆம் ஆண்டு (10/11/12/13 ஆம் குழுக்கள்)	2018/2019-2019/2020-2020/2021-2021/2022	69	94	163
3 ஆம் ஆண்டு (8/9/10/11/12/13 ஆம்	2016/2017-2017/2018-2018/2019-2019/2020-2020/2021-2021/2022	96	105	201
4 ஆம் ஆண்டு (7 / 8 / 9 / 10 ஆம் குழுக்கள்)	2015/2016-2016/2017-2017/2018-2018/2019	44	23	67

அட்டவணை – 11 : கடந்த 03 ஆண்டுகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட மற்றும் சித்தியடைந்த மாணவர்கள்

